JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 66/2024 |
| | : | Prosecution P.W - 15 |
| NAME | : | **ஸ்தேவான் சேகர்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 14.11.2024

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் இதற்கு முன்பு கடையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடையம் காவல் நிலையக்குற்ற எண் 124/2016 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழான வழக்கை இதற்கு முன்பு பணிபுரிந்த உதவி ஆய்வாளர் கந்தசாமி அவர்கள் புலன்விசாரணை செய்த கோப்பினை பெற்று நான் 08.07.2016ம் தேதி நான் புலன் விசாரணை மேற்கொண்டேன். நான் சம்பவஇடத்தை சென்று பார்வையிட்டேன். உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் அனைத்தையும் நான் விசாரித்தபோது ஏற்கனவே சொன்ன வாக்குமூலங்களையே என்னிடம் சொன்னதாக தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. 08.10.2016ம் தேதி இவ்வழக்கின் 2ம் எதிரி சண்முகவேல் மாண்புமை மதுரை உயர்நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று அதற்கு பிறகு கடையம் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனார். 2ம் எதிரி சண்முகவேல் ஒப்படைத்த TN69U8725 என்ற பாஜாஜ் பல்சர் வண்டியை ஒப்படைத்ததை சாட்சிகள் கருப்பன் மற்றும் இசக்கி ஆகியோர்கள் முன் அத்தாட்சி பிறப்பித்து

கைப்பற்றினேன். சாட்சிகள் கருப்பன், இசக்கி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தனுஷ்கோடியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இந்த வழக்கின் புலன் விசாரணையை முடித்துக்கொண்டு எனது விசாரணையில் இருந்து சாட்களின் வாக்மூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் 1 வது எதிரிமீது இதச பிரிவு 294(பி), 324, 506(2)– ன் கீழ் 2 வது எதிரி சண்முகவேல் இதச பிரிவு 294(பி), 506(2) மற்றும் 3 வது எதிரி சுந்தர் என்ற சுந்தரபாண்டியன் மீது இதச பிரிவு 294(பி), 324, 506(2)மற்றும் 4 வது எதிரி சதீஷ் என்பவர் மீது இதச பிரிவு 294(பி), 506(2) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். TN69U8725 என்ற வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சி அசாஆ. 15 ஆகவும் TN69U8725 என்ற வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்த படிவம் 91 அசாஆ 16 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi